O.S. No: 100/2025
பெயர்:சண்முகம்
**வா.சா.7**
05-02-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 04.15**

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சா.சா.ஆ.7 நான் தாக்கல் செய்த ஆவணம் . நான் ஏற்கனவே 25/09/2025 இல் சாட்சியமளித்திருக்கிறேன் . அப்பொழுதும் இதே ஆவணம் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அது சா .சா.ஆ-1 மற்றும் சா .சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி . எதனடிப்படையில் இந்த பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது . அதற்குண்டான ஆவணங்களை நான் பார்க்கவில்லை. இந்த ஆவணம் 2008 இல் ஏற்பட்டது. இதே சொத்தை பொறுத்து 1908 இல் பழைய நகர பதிவேட்டில் பதிவு உள்ளது . சா.சா.ஆ.4 இல் அய்யனார் கோவில் என்று அடங்கல் காலத்தில் உள்ளது. நான் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**7 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சா.சா.ஆ.1 இல் மங்கலம் என்ற பெயர் பதிவாகி உள்ளது . எந்த ஆவணத்தின் அடிப்படையில் எந்த ஆவணத்தை பார்த்து பதிவானது என்று தெரியாது . இந்த பதிவேட்டு நகலில் நான்கெல்லை குறிப்பிடப்படவில்லை என்றால் சரி . இதை பதிவு செய்த தாசில்தாரை கேட்டால் தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரி . வாதி தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 04.25**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and

interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.